(ஆ) 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித்துறைகள்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு, மதுரைப் பல்கலைக் கழக (திருத்த-சிறப்பு விதித் துறைகள்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: ஐ அப்போஸ் தி இன்ட்ரொடக்ஷன் ஆப் தி பில். இதைப்பற்றி ஏற்கனவே நான் 'நான் டிஸ் அப்ரூவல்' நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்கிறேன். ஏற்கனவே ஆர்டினன்ஸ் ஆக போட்டதை இப்போது மசோதா வாகக் கொண்டுவருகிறார்கள். இது சம்பந்தமாக ஆளுநர் உரைமீது பேசிய உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லி யிருக்கிறார்கள். சிறந்த வரலாற்றுச் சிறப்பும் தொன்மையான பல சிறப்புகளையும் கொண்ட மதுரையின் பெயர் இருக்கவேண்டும் என்று சொன்னபோது அதற்கு முதலமைச்சர் அவர்கள் அதிலே மதுரையை இணைத்தால் சரியாக இருக்காதா என்று கேட்டு அதைச் சேர்க்கக்கூடிய இம்ப்ரஷனைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலையிலே இப்போது அந்த அடிப்படையிலே இந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்யாமல் கொண்டுவந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு லீடிங் இம்ப்ரஷன் கொடுத்ததற்கு மாறாகவும் திரு. கந்தசாமி அவர்கள் சொன்ன கருத்தையொட்டி முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கு மாறாகவும் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: இந்த சட்டமுன்வடிவு சட்டமாக ஆவதற்கு முன்பு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: தலைவர் அவர்களே, நானும் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். நானும் இதற்காக ஏற்கனவே நோட்டீஸ் கொடுத்திருந்தாலும் அதைப்பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம் என்றாலும் இப்போது இந்த மசோதாவை முழுமை யாக இன்ட்ரட்யூஸ் பண்ணுவதை நான் எதிர்க்கிறேன். அதற்கு தாங்கள் தீர்ப்புக் கொடுக்கவேண்டும். நான் பேசியபோது முதலமைச்சர் அவர்கள் மதுரைப் பல்கலைக்கழகத்தோடு காமராஜ் என்று சேர்க்கலாம் என்ற முறையிலே பதில் சொன்னார்கள். இருந்தாலும் நான் இந்த மசோதா முழுவதையும் எதிர்க்கிறேன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 7]

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10.30]

(6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே ஆளுநர் உரையை நான் மிகவும் கவனமாகப் படித்துப் பார்த்தேன். இந்த ஆளுநர் உரையில் கடந்த ஆண்டு என்ன கருத்துக்கள் சொல்லப்பட்டனவோ அதே கருத்துக்கள்தான் திரும்பவும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலே புதிய அம்சங்கள் இல்லை. சினிமாக்காரர்கள் பாணியில் சொல்ல வேண்டுமானால், இந்த ஆளுநர் உரை பழைய படம், ஆனால் புதிய காப்பி என்று சொல்வதைத் தவிர வேறொன்றும் இல்லை.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தியாக தீபம் காமராஜ் அவர்களுடைய பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். இவைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்தச் சூழ்நிலையில் தந்தை பெரியார் அவர்களின் பெயரை சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இஸ்மாயில் கமிஷன் தீர்ப்பின்மீது நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்மாயில் கமிஷன், குற்றவாளிகள் என்று தெளிவாகச் சொல்லியிருக்கும் பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக திரு. கிருஷ்ணசாமி, அடிஷனல் ஐ. ஜி. அவர்களுக்கு பிரசிடெண்ட் அவார்ட் கிடைப்பதற்கு இந்தச் சர்க்காரே சிபாரிசு செய்திருப்பது எந்தவிதத்தில் நியாயமாக இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். கேரளாவில இராஜன் கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட எல்லா போலீஸ் அதிகாரிகளையும் கேரள அரசு வேலை நீக்கம் செய்து அவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்து, நீதிமன்றம் அவர்களில் பலரைக் குற்றவாளிகள் என்று அறிவித்தது. இங்கேயும், கேரள அரசைப் பின்பற்றி, இஸ்மாயில் கமிஷனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற உண்மையான குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.